# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1997 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிரிவிடல் (திருத்தச்) சட்டம்

---

(1997 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1997 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 27.75 — தபாற் செலவு : ரூபா 4.60

# 1997 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிரிவிடல் (திருத்தச்) சட்டம்

1

ச. வ.- ஒ. 66/95

[1997 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடற் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பிரிவிடல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடற் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அவர்களுள் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஒருவரின் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோரின் சொத்தாண்மை, வேறெவரேனுமாளின் சீவிய உரித்துக்கு அமைந்ததாகவுள்ளதாயினுஞ்சரி அல்லாதாயினுஞ்சரி, அவர்களுள் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோர்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :—

> "(2) ஒரு பிரிவிடுதல் வழக்கைத் தொடுக்கும் நோக்கத்துக்காக நீதிமன்றமொன்றுக்கு முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு பிராதுடனும், வழக்கை இறுதியாகத் தீர்மானிக்குமுன்னர் அவர் இறக்கும் பட்சத்தில், வழக்கின் நோக்கங்களுக்காக வழக்காளியின் சட்டப் பிரதிநிதியாகவிருப்பதற்கான ஆளொருவரை, 81 ஆம்

பிரிவிற்கிணங்கப் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்றதும், பொருளளவில் இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலானதுமான நிருபமொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு அதன் (2) ஆம் உட்பிரிவில் "இணைப்பிரதிகளாகவும்" என்ற சொல்லுக்குப் பதிலாக, "முப்பிரதிகளாகவும் முறையே "மூலப்பிரதி", "இணைப்பிரதி" மற்றும் "முப்பிரதி" எனக் குறிப்பீடு செய்யப்பட்டும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"பிராதை ஏற்றுக் கொண்டதன் மீதான நடவடிக்கை முறை.

8. (1) ஒரு பிரிவிடல் வழக்கிலான பிராதொன்று ஏற்றுக்கொள்ளப்படுமிடத்து, நீதிமன்றமானது, உடனடியாக—

(அ) வழக்கை முடிவுறா வழக்கொன்றாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தின் ஒவ்வொரு பிரதியிலும் வழக்குக்கு நீதிமன்றத்தினால் குறித்தொதுக்கப்பட்ட இலக்கம் பற்றிய குறிப்பீடொன்றை இடச் செய்தல் வேண்டும் ;

(ஆ) உடனடியாகவும், எப்பட்சத்திலும் பிராது ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குப் பிந்தாமலும், வழக்கானது முடிவுறா வழக்காகப் பதிவுசெய்யப்படவுள்ள ஒவ்வொரு காணிப்பதிவகத்தினதும் காணிப்பதிவாளருக்கு முப்பிரதிகளிலான விண்ணப்பத்தை அனுப்பிவைக்கச் செய்தல் வேண்டும் ;

(இ) காணிப்பதிவாளரினால் பதிவுசெய்யப்பட்ட முடிவுறா வழக்கு திருப்பியனுப்பப்படுவதற்காக பிராது ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஏழு கிழமைகளுக்குப் பிந்தாத ஒரு திகதியாகவுள்ள ஒரு திகதியை, நிர்ணயித்தல் வேண்டும் :

ஆயின், நீதிமன்றம், அதன் அபிப்பிராயத்தில் விடயத்தின் சூழ்நிலைகள் அவ்வாறு தேவைப்படுத்துமாயின், பதிவுசெய்தபின்னர் முடிவுறா வழக்கை திருப்பியனுப்புவதற்கான திகதியை நீடிக்கலாம் ;

(ஈ) பிராது ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து ஏழு கிழமைகளுக்குப் பிந்தாததாகவுள்ளதும், நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு வழக்கானது, எக்காணியுடன் தொடர்புபட்டதோ அக்காணியின் பூர்வாங்க அளப்பனவுக்குரிய அத்தகைய மதிப்பிடப்பட்ட செலவுத் தொகைகளை எத்தேதியன்று அல்லது எத்தேதிக்கு முன்னர் வழக்காளி நீதிமன்றத்தில் வைப்பிட வேண்டுமோ அத்திகதியாகவுள்ளதுமான ஒரு திகதியை நிர்ணயிக்கலாம்.

அத்தகைய பூர்வாங்க அளப்பனவுக்குரிய செலவுத் தொகைகளை மதிப்பிடுவதில், நீதிமன்றமானது, ஒழுங்கு விதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களைக் கருத்தில் எடுத்தல் வேண்டும்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, "அந்த விண்ணப்பத்தின்" என்ற சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"அந்த விண்ணப்பத்தின் முப்பிரதியை ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட முறையில் உரிய முறையாகப் புறக்குறிப்பிடப்பட்டு அத்தகைய முப்பிரதியைத் திருப்பியனுப்புவதற்காக நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று அல்லது திகதிக்கு முன்னர் நீதிமன்றத்துக்குத் திருப்பியனுப்புதல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதியொன்றை வழக்காளியின் பதிவுசெய்யப்பட்ட அற்றோணித் தத்துவகாரருக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கச் செய்தலும் வேண்டும், அல்லது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட அற்றோனித் தத்துவக்காரர் எவரும் இல்லாதவிடத்து, வழக்காளிக்கு அனுப்பி வைக்கச் செய்தலும் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு அப்பிரிவு (1) ஆம் உட்பிரிவில் "இணைப்பிரதி" என்னும் சொல்லுக்குப் பதிலாக "முப்பிரதி" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்கு பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) பிரிவிடல் வழக்கொன்றானது ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் முடிவுறா வழக்கொன்றாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கானது, எந்தக் காணியுடன் தொடர்புபட்டுள்ளதோ அந்தக் காணியின் பூர்வாங்க அளப்பனவுக்குரிய மதிப்பிடப்பட்ட செலவுத்தொகைகள் நீதிமன்றத்தில் வைப்பிடப்பட்டுள்ளன என்றும், வழக்கிலான வழக்காளி 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியுள்ளார் என்றும் நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (ஈ), (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளின் கீழ் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட அத்தகைய அழைப்புக் கட்டளைகள், அழைப்புக் கட்டளைகளின் மொழிபெயர்ப்புடன், விடயத்துக்கேற்ப பிராதின் அல்லது சுருக்கக் கூற்றுகளின் பிரதிகள் மற்றும் மொழிபெயர்ப்புகள், அறிவித்தல்களின் பிரதிகள் மற்றும் அறிவித்தல்களின் மொழிபெயர்ப்புகளினது பிரதிகள் என்பன எதிராளிக்கும் அந்தந்தக் கிராமசேவை அலுவலர்களுக்கும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப் படுதல்

வேண்டும் என்றும், 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் கோப்பிடப்பட்ட அறிவித்தலின் பிரதிகள், அதன் மொழி பெயர்ப்புகளின் பிரதிகளுடன், 15 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு வெளிக்காட்டலுக்கும் பிரகடனத்துக்கும் எனப் பிசுக்காலுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்றும் நீதிமன்றம் கட்டளையிடுதல் வேண்டும்." ;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில் "இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ்" என்ற சொற்களிலிருந்து அப்பிரிவின் முடிவு வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட தேதியை 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் அத்தகைய அழைப்புக் கட்டளைகள், அழைப்புக் கட்டளையின் மொழிபெயர்ப்புகள், அறிவித்தலின் பிரதிகள் அறிவித்தலின் மொழிபெயர்ப்புகளின் பிரதிகள் ஆகியவற்றில் இடுதல் வேண்டும் என்பதுடன், அவற்றை ஒப்பமிட்டு பதிவஞ்சல் மூலம் அனுப்பச் செய்தலும் வேண்டும் ; " ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் "அந்த எதிராளியின்மீது சேர்ப்பிக்கவெனப் பிறப்பிக்கப் பட்ட அழைப்புக் கட்டளையில்" என்ற சொற்களுக் குப் பதிலாக, "அந்த எதிராளிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட அழைப்புக் கட்டளையில் என்ற" சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்*

9. முதன்மைச் சட்டவாக்கத்தில் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) "எதிராளிகளாக உள்ளவர்கள்மீது சேர்ப்பிப் பதற்கென அழைப்புக் கட்டளையை வழங்குமாறு நீதிமன்றம் கட்டளையிடுகின்ற விடத்து" என்ற சொற்களுக்குப் பதிலாக, "எதிராளிகளாக உள்ளவர்கள்மீது அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பிக்குமாறு

நீதிமன்றம் கட்டளையிடுகின்றவிடத்து" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(ஆ) "கிராமசேவக அலுவலருக்கு அனுப்பி வைக்கும்படி" என்ற சொற்களுக்குப் பதிலாக "கிராம சேவை அலுவலருக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பிவைக்கும்படி" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அனுப்பி வைக்கப்பட்ட" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பதிவஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பட்ட" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் " அந்த அறிவித்தலின் ஒரு பிரதியை." என்ற சொற்களுக்குப் பதிலாக " ஒராம் உட்பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பிவைக்கப்படட அந்த அறிவித்தலின் ஒரு பிரதியை" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பிரிவிடல் வழக்கிற்கான எதிராளிகளிடம் சேர்ப்பித்தற்கென, அழைப்புக் கட்டளையை பிசுக்காலுக்கு வழங்கு மாறு நீதிமன்றம் கட்டளையிடும்போது." என்ற சொற்களுக்குப் பதிலாக, "பிரிவிடல் வழக்கிற்கான எதிராளிகளிடம் அழைப்புக் கட்டளைகளைச் சேர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிடுமிடத்து." என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும் :—

"ஆயின், நீதிமன்றமானது, ஆணையாளரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது பதியப்பட வேண்டிய காரணங்களுக்காகவும், ஆணையைத் திருப்பியனுப்புவதற்காக, அதில் நிர்ணயிக் கப்பட்ட திகதியைக் காலத்துக்குக்காலம்

நீடிக்கலாம்; எவ்வாறாயினும், அத்தகைய ஒவ்வொரு நீடிப்பும் அறுபது நாட்களை விஞ்சுதலாகாது.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "படிவத்திலான அறிக்கையொன்று" என்னும் சொற்களுக்குப் பதிலாக "படிவத்தில் இணைப் பிரதிகளிலான அறிக்கையொன்று" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "காணியினது வரைபடம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "காணியினது இணைப் பிரதிகளிலான வரைபடம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (3) உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், புதிய வெளிக்களக் குறிப்புக்களையும் புதிய வரைபடத்தையும் தயாரித்தலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "புதிய வெளிக்களக் குறிப்புகளையும் புதிய வரைபடத்தையும் இணைப்பிரதிகளில் தயாரித்தலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(ஈ) வழக்கிலிருக்கும் எதிராளி ஒவ்வொருவரும், வழக்கின் இறுதித் தீர்மானம் முடிவுறாதிருக்கையில் அவர் இறக்கும் பட்சத்தில் வழக்கின் நோக்கங்களுக்காக அவரது சட்டப்பூர்வமான பிரதிநிதியாக இருப்பதற்கென ஆளொருவரை 81

ஆம் பிரிவிற்கிணங்க பெயர் குறித்து நியமிக்கும் கோரிக்கைக் கூற்றொன்றைப் பொருளளவில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையிற் தரப்பட்டுள்ள படிவத்தில் நீதிமன்றத்தில் கோப்பிடுதல் அல்லது கோப்பிடச் செய்வித்தல் வேண்டும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(3) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் பயனைக் கொண்டு, எந்தக் காணி அதன் சிறிய அளவின் அல்லது குறைவான பெறுமதியின் காரணமாக அல்லது அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணியின் உட்பிரிவை ஒழுங்குசெய்யும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த பரப்பளவுக்கும் குறைவாக அது இருப்பதன் காரணமாக எந்த ஆளுக்கு, பிரிக்கப்பட்ட பாகம் ஒன்றைப் பிரித்தொதுக்குவது உசிதமானதென நீதிமன்றம் கருதுகின்றதோ அவ்வாள் அந்தக் காணியின் பிரிபடாத பரப்பளவொன்றுக்கு உரித்துடையவராயிருக்கின்றவிடத்து, நீதிமன்றமானது; அவ்வாளுக்கு அக்காணியின் பிரிக்கப்பட்ட பாகமொன்று பிரித்தொதுக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடுவதற்குப் பதிலாகவும் அத்துடன் அவ்வாளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நட்டஈடு செலுத்தப்படுவதன்மீதும் அந்தப் பரப்பளவை, வழக்கு எந்தக் காணியைத் தொடர்புறுத்து கின்றதோ அந்தக் காணியின் பிரிபடாத' பரப்பளவுக்கு உரித்துடையவரான வேறு எவரேனும் ஆளுக்குப் பிரித்தொதுக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

"(2) வழக்கிடைத் தீர்வையொன்றின் கீழ் எவரேனும் ஆளுக்குப் பிரித்து ஒதுக்கப்படவுள்ள ஏதேனும் பிரிக்கப்பட்ட பாகம் அல்லது பாகங்கள் அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணியின் உட்பிரிவை ஒழுங்குபடுத்தும் எழுத்திலான சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட ஆகக் குறைந்த பரப்பளவை விடக் குறைவாக இருக்கின்றவிடத்து, நில அளவையாளர் சாத்தியப்படக்கூடிய அளவுக்கு, அத்தகைய பாகங்கள் ஒரே துண்டாக பிரித்தொதுக்கப்படுவதனை அல்லது விற்பனை செய்யப்படுவதனை இயலச் செய்கின்ற வாறான அத்தகைய முறையொன்றில் அக்காணியைப் பிரிவிடுதல் வேண்டும்.".

15. முதன்மைச் சட்டவாக்கம் அதன் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (அ) என்னும் பந்தியில் "அவரால் தயாரிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவரால் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அதன் (இ) என்னும் பந்தியில் "அக்காணி பிரிவிடப்பட்டிருக்கும்" என்பதிலிருந்து, "வழங்கப்பட்ட திகதிகளையும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும், பதிலாக, "அக்காணி பிரிவிடப்பட்டிருக்கும் முறையை விளங்கவைப்பதும், அக்கட்சிக்காரர்களின் பெயர்களையும் முறையே அவர்களுக்குரிய பங்குகளினதும் அக்கறைகளினதும் தன்மையையும் அளவையும் அத்துடன் அத்தகைய பரப்பளவு, அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணியின் உட்பிரிவிடல் தொடர்பில் எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த பரப்பளவை விடக் குறைவாக இருக்குமிடத்து

அதனைக் குறிப்பிடும் கூற்றொன்றையும் அக்காணியைப் பிரிவிடற்காக அக்காட்சிக் காரருக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்ட திகதிகளையும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்:—

"(ஈ) காணித்துண்டொவ்வொன்றினதும் மதிப்பிடப்பட்ட பெறுமதியையும் அதன்மீது செய்யப்பட்ட எவையேனும் சீர்திருத்தங்களின் பெறுமதியையும் அத்துடன் நீதிமன்றமானது, 26 ஆம் பிரிவின் கீழ் காணித்துண்டுகளை ஒரே துண்டாகப் பிரித்தொதுக்குமாறு ஆணையாளரைப் பணித்துள்ளவிடத்து ஒரே துண்டாகப் கருதப்பட்ட காணித் துண்டுகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதியையும் அதன்மீது செய்யப்பட்ட எவையேனும் சீர்திருத்தங்களின் பெறுமதியையும் அத்தகைய கணிப்பிடல் பற்றிய விவரங்களையும் ; அத்துடன் ",

(4) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(ஊ) பிரிவிடல் வரைபடம் அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணியின் உட்பிரிவிடல் தொடர்பில் எழுத்திலான சட்டத்திற்கு இணங்கியதாயிருக்கின்றது என்ற பயன்பாட்டிற்குச் சான்றிதழொன்று"; அத்துடன்

(5) " அறிக்கையும், மதிப்பீடும் பொழிப்பும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறிக்கையும், மதிப்பீடும், பொழிப்பும் சான்றிதழும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 35ஆம் பிரிவு, "நீதிமன்றம் அந்நில அளவையாளரினால் உத்தேசிக்கப்பட்ட பிரிவிடற்றிட்டத்தை ஆலோசிப்பதற்காக ஒரு திகதியை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நீதிமன்றம் வழக்கை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தல் வேண்டும் என்பதுடன்

திருப்பியனுப்பற் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்கு முன்னராகவிராத திகதியொன்றை நிர்ணயித்தலும் வேண்டும்", என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 36ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"பிரிவிடற்கான இறுதித் தீர்வை

36. (1) முப்பத்தைந்தாம் பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று அல்லது அந்நோக்கத்துக்காக நீதிமன்றம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய ஏதேனும் பிந்திய திகதியன்று நீதிமன்றம் சுருக்கமுறை விசாரணையின் பின்னர்—

(அ) அந்நில அளவையாளரினால் உத்தேசிக்கப்பட்ட பிரிவிடற் திட்டத்தைத் திரிபுடனோ திரிபின்றியோ உறுதிப்படுத்தலாம் என்பதோடு அதற்கிணங்க இறுதித் தீர்வையை எழுதுதலும் வேண்டும் ;

(ஆ) அத்தகைய துண்டின் பரப்பளவு, அபிவிருத்தி நோக்கங்களுக்கு காணியின் உட்பிரிவாக்கம் தொடர்பில் எழுத்திலான சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்த பரப்பளவை விடக் குறைவானதாகும் என ஆணையாளர் 32ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டுள்ளவிடத்து, 32ஆம் பிரிவின் கீழ் நில அளவையாளரால் கொடுக்கப்பட்ட அத்தகைய துண்டின் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் துண்டின் விற்பனைக்கு கட்டளையிடலாம்.

(2) பிரிவுகள் 41,42,43,44,45,45அ, 46,47,48(2) என்பவற்றின் ஏற்பாடுகள் (1) ஆம் உட்பிரிவின்

(ஆ) என்னும் பந்தியின் கீழ் கட்டளையிடப்பட்ட விற்பனையொன்றுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 36அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

18. பின்வரும் பிரிவு 36ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 36அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"மேன் முறையீடு

36 அ. முப்பத்தாறாம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்றத்தின் கட்டளையொன்றில் அதிருப்தி கொண்ட ஆளெருவரும், முதலில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியுடன் அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன் முறையீடொன்றைச் செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 45அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

19. பின்வரும் பிரிவு 45ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 45அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்:—

"மேன் முறையீடு

45அ. (1) நாற்பத்தைந்தாம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட நீதிமன்றக் கட்டளையொன்றினால் அதிருப்தியுற்ற ஆளெவரும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் அனுமதியை முதலில் பெற்றுக் கொண்டு அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீடொன்றை முன்வைக்கலாம்.

(2) மேன்முறையீடு செய்யும் அனுமதிக்கான விண்ணப்பம் தொடர்பில் குடியியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவையின் அத்தியாயம் LVIII என்பதன் ஏற்பாடுகள் 36அ அல்லது 45அ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் அனுமதிக்கான விண்ணப்பங்களுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46ஆம் பிரிவு "வழக்குப் பதிவேட்டில் பதிதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக " வழக்குப் பதிவேட்டில் பதிதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று கொள்வனவாளருக்கு வழங்கப்படுவதற்குக் கட்டளையிடுதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48ஆம் பிரிவு அப்பிரிவின் 4ஆம் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்ததல்.

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை நீக்கம் செய்வதன் மூலமும்; அத்துடன்

(2) "அக்கட்சிக்காரரின் வழக்குக்கான பாதுகாவலராக" என்பதிலிருந்து "முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் எந்நேரத்திலும் " என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாக "அக்கட்சிக்காரரின் வழக்குக்கான பாதுகாவலராக நியமிக்கப்பட்ட ஆள், 35ஆம் பிரிவின் கீழ் பிரிவிடற்றிட்டத்தை ஆலோசிப்பதற்காக நியமிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அல்லது 42ஆம் பிரிவின் கீழ் விற்பனைக்குப் பொறுப்பாகவுள்ள ஆளினது திருப்பியனுப்பற் கூற்று நீதிமன்றத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியின் பின்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாமல் எந்நேரத்திலும் ," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 49ஆம் பிரிவு "பாதிக்கப்பட்ட வருமான ஆள் எவரும் பிறிதொரு வழக்குமூலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாதிக்கப்பட்டவருமான ஆள் எவரும், பிரிவிடல் வழக்கில் இறுதித் தீர்வையின் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிந்தாமல் தொடுக்கப்பட்ட பிறிதொரு வழக்கு மூலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 49 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 52அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**23.** பின்வரும் பிரிவு, 52 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 52அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"உடைமையை மீளளித்தல்.

52அ. (1) (அ) இச்சட்டத்தின் கீழ் பதியப்பட்ட ஏதேனும் இறுதித் தீர்வைமூலம் ஏதேனும் காணிக்கு உரித்துடையவர் என வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அத்துடன் அத்தகைய காணியை உடைமையை வைத்திருக்கும் ஆள் எவரும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் விற்பனையில் ஏதேனும் காணியைக் கொள்வனவு செய்தவரும் அத்துடன் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட காணி தொடர்பில் எவ்வாளின் சார்பில் விற்பனைச் சான்றிதழொன்று நீதிமன்றத்தினால் பதியப்பட்டிருக்கிறதோ அவ்வாள் எவரும் அல்லது

(இ) பந்தி (அ) அல்லது பந்தி (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆள் ஒருவரிடமிருந்து உரித்தைப் பெற்றிருக்கின்ற ஆள் எவரும்,

அத்துடன் எவ்வாளின் உடைமைமீது இடையீடு செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது இடையீடு செய்யப்படுகிறதோ அல்லது எவ்வாளின் உடைமை பறிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வாள் எவரும், விடயத்துக்கு ஏற்றவாறு பிரிவிடல் இறுதித் தீர்வை வழங்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது விற்பனைச் சான்றிதழ் பதியப்பட்ட தேதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள், விடயத்துக்கேற்றவாறு அத்தகைய இடையீடு நிகழ்ந்த அல்லது உடைமை பறிக்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் உடைமை மீளளிக்கப்படுவதற்காக, மனு என்ற

வகையில் அதே வழக்கில் விண்ணப்பம் ஒன்று செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) எவ்வாளுக்கு எதிராக உடைமை மீளளிப்பதற்கான விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ, அவ்வாள் விண்ணப்பத்துக்குப் பிரதிவாதியாக ஆக்கப்படுதல் வேண்டும்.

(3) நீதிமன்றம், விடயம் பற்றி முறையாக விசாரணை செய்த பின்னர், விடயத்தின் நீதி தேவைப்படுத்தக் கூடியவாறாக உடைமையை ஒப்படைப்பதற்கான அல்லது வேறுவகையிலான கட்டளையை ஆக்குதல் வேண்டும்;

ஆயின், பிரிவிடல் இறுதித் தீர்வையிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து பிணக்கிலுள்ள காணியின் அல்லது அதன் பாகத்தின் உரித்தைப் பெறுகின்ற ஆளொருவராக பிரதிவாதி இருக்கின்றவிடத்து அல்லது பிரிவிடல் இறுதித் தீர்வின் கீழ் அல்லது விற்பனையின் கீழ் அத்தகைய காணிக்கான உரித்தைப் பெற்றிருக்கின்ற ஆள் ஒருவரிடமிருந்து அல்லது அத்தகைய இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளொடு தொடர்புடையோர்களிடமிருந்து அல்லது அத்தகைய ஆளினது மரபுரிமையாளர்களிடமிருந்து அத்தகைய காணிக்கான உரித்தைப் பெற்றிருக்கின்ற ஆளொருவராக இருக்கின்றவிடத்து, காணியின் உடைமை ஒப்படைப்பதற்கான கட்டளையெதுவும் ஆக்கப்படுதலாகாது. ".

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 67ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவை, அதன் (1)ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில் —

(அ) "மேன்முறையீடொன்று அமைதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "36அ மற்றும் 45அ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, மேன்முறையீடொன்று அமைதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "அதற்கிணங்க ஏற்புடையனவாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இப்பிரிவை அடுத்துவரும் ஏற்பாடுகளுக்கமைய, அதற்கிணங்க ஏற்புடையனவாதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(2) ஏதேனும் நீதிமன்றத்தில் பிரிவிடல் வழக்கொன்றில் ஆக்கப்பட்ட அல்லது பதியப்பட்ட ஏதேனும் தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு ஒன்று செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, நீதிமன்றமானது, எந்தத் தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கின்றதோ, அத்தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது கட்டளைக்கு இயைபான எல்லாப் பத்திரங்களையும் வழக்கு நடவடிக்கைகளையும், எந்தத் தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டிருக்கிறதோ அத்தீர்ப்பின், தீர்வையின் அல்லது கட்டளையின் பிரதி ஒன்றையும் 32 ஆம் பிரிவின் கீழ் நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட வரைபடத்தினதும் அறிக்கையினதும் இணைப்பிரதியையும் வைத்துக் கொண்டு, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் பிரிவிடல் வழக்கில் ஏதேனும் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட அல்லது பதியப்பட்ட ஏதேனும் தீர்ப்புக்கு, தீர்வைக்கு அல்லது கட்டளைக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய நீதிமன்றமானது, அதற்கென மனு அத்துடன் சத்தியக்கடுதாசி என்றவகையில் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டதன்மேல், மேன்முறையீடு தீர்மானிக்கப்

படாதிருக்கும் வரை எக்காணி தொடர்பில் அத்தகைய வழக்கு தாக்கல் செய்யப்பட்டதோ அக்காணிக்கு ஏதேனும் விரயம் அல்லது சேதம் ஏற்படுவதைத் தடைசெய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய கட்டளைகளை ஆக்கலாம். அத்தகைய கட்டளை எதற்கும் 53 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவாறாகப் பயன் கொடுக்கப்படலாம்.".

**25.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 69 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "வழக்குக்கான கட்சிக்காரராக ஆக்கப்படவேண்டிய அல்லது ஆக்கப்பட்டிருக்க வேண்டிய எவரேனும் ஆளை, அல்லது," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய ஆளுக்கு, இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டு உள்ள திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ வழக்குக்கு கட்சிக்காரர் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு விண்ணப்பமொன்றைச் செய்யுமாறு அவரைத் தேவைப்படுத்துகின்ற பொருளளவிலான அறிவித்தலொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்கிய பின்னர் அத்துடன் அத்தகைய ஆள் அத்தகைய விண்ணப்பம் ஒன்றைச் செய்ததன் மேல், வழக்குக்கான கட்சிக்காரராக ஆக்கப்பட வேண்டிய அல்லது ஆக்கப்பட்டிருக்க வேண்டிய எவரேனும் ஆளை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர், பின்வரும் புதிய உப பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் கட்சிக்காரராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு விண்ணப்பிக்கின்ற ஆள் எவரும் வழக்கின் இறுதித் தீர்மானம் முடிவுறா

திருக்கும்போது அவர் இறக்கும் பட்சத்தில் பிரிவிடல் வழக்கில் அவரது சட்டரீதியான பிரதிநிதியாக இருப்பதற்கு 81 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆள் ஒருவரைப் பெயர்குறித்து நியமிக்கின்றதும் இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொருளளவில் உள்ளதுமான நிருபம் ஒன்றைத் தமது விண்ணப்பத்துடன் சேர்த்துக் கோப்பிடுதல் வேண்டும்" ;

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "கட்டுப்பட்டவராகவும் இருப்பார்", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கட்டுப்பட்டவராகவும் இருப்பார். கொள்வனைகாரர் வழக்கின் இறுதித் தீர்மானம் முடிவுறாதிருக்கும்போது அவர் இறக்கும் பட்சத்தில் பிரிவிடல் வழக்கில் அவரது சட்டரீதியான பிரதிநிதியாக இருப்பதற்கு 81 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆள் ஒருவரைப் பெயர்குறித்து நியமிக்கின்றதும் இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொருளளவில் உள்ளதுமான நிருபம் ஒன்றை அவர் பதிலீடு செய்யப்படுவதற்கான அவரது விண்ணப்பத்துடன் சேர்த்துக் கோப்பிடுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "உரித்துடையவராதல் வேண்டும்", என்னும் சொற்களுக்குப் பதிலாக "உரித்துடையவராதல் வேண்டும். இவ்வுட்பிரிவின் கீழான இடைவருநர் ஒருவர் வழக்கின் இறுதித் தீர்மானம் முடிவுறாதிருக்கும் போது அவர் இறக்கும் பட்சத்தில் பிரிவிடல் வழக்கில் அவரது சட்டரீதியான பிரதிநிதியாக இருப்பதற்கு 81 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆள் ஒருவரைப் பெயர்குறித்து நியமிக்கின்றதும் இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் பொருளளவில் உள்ளதுமான நிருபம் ஒன்றை இடைவருவதற்கான அவரது விண்ணப்பத்துடன் சேர்த்துக் கோப்பிடுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(4) ஒராம் உட்பிரிவின் கீழ் கட்சிக்காரர் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு விண்ணப்பிக்கின்ற ஆள் எவரையும், அத்தகைய விண்ணப்பகாரர் தமது உரிமைக் கோரிக்கையை முன் வைப்பதில் நியாயமற்ற தாமதத்திற்குக் குற்றவாளியாக இருந்திருக்கின்றார் என நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால் அல்லது வேறு நல்லதும் போதுமானதுமான காரணத்துக்காகச் செலவு தொகைகளுக்கான பிணைப்பொறுப்பு வழங்குமாறு அல்லது செலவு தொகைகளை முன்னரே செலுத்துமாறு கட்டளையிடுவது நீதிமன்றத் திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ் கட்டளையிடப்படவேண்டிய செலவு தொகைகளின் அளவைத் தீர்மானிக்கையில், நீதிமன்றமானது, விண்ணப்பகாரரைப் பொறுத்தவரையிலான ஏதேனும் தாமதம், வழக்கானது எந்தக் கட்டத்தில் இருக்கிறது, கட்சிக்காரர்களுக்கு நியாயமற்ற முறையில் ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் செலவினம் அத்துடன் இயைபானதென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் வேறு விடயம் என்பவற்றைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

(6) செலவுத் தொகைகளுக்குப் பிணைப்பொறுப்பு வழங்குமாறு அல்லது செலவுத் தொகைகளை முன்னரே செலுத்துமாறு கட்டளையிடப்பட்டுள்ளவரும் இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவருமான ஆள் எவரும், நீதிமன்றத்தினால் அதற்கென அனுமதிக்கப் பட்ட கால எல்லைக்குள் செலவுத் தொகைகளுக்கான அத்தகைய பிணைப்பொறுப் பைக் கொடுப்பதற்கு அல்லது செலவுத் தொகைகளின் முற்கொடுப்பனவைச் செய்வதற்கு தவறுகின்றவிடத்து, நீதிமன்றம்

அவருடைய விண்ணப்பத்தை நிராகரிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**26**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 70 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்த்துக்கொள்ளுவதன் மூலமும் :—

"(2) பிரிவிடல் வழக்கொன்றிலுள்ள கட்சிக்காரர் எவரும் அல்லது எக்காணி தொடர்பில் அத்தகைய வழக்குத் தொடரப்பட்டுள்ளதோ அக்காணியில் அக்கறையொன்றைக் கோருகின்ற ஆள் எவரும், இரண்டாண்டு காலப்பகுதி ஒன்றுக்கு வழக்கை நடத்துவதற்கு நடபடிகள் எவையும் எடுக்கப்பட்டிருக்காவிட்டால், அத்தகைய வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு பிரேரணை என்ற வகையில் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம், அத்துடன் அவ்வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளையும் எடுத்து நோக்கும்போது அவ்வழக்கைத் தள்ளுபடி செய்வது நீதியின்பாற்பட்டது என நீதிமன்றம் திருப்திப்பட்டால் அது அவ்வழக்கைத் தள்ளுபடி செய்யலாம்.

(3) நீதிமன்றம் இப்பிரிவின் கீழ் வழக்கு ஒன்றைத் தள்ளுபடி செய்கின்றவிடத்து, வழக்கைத் தள்ளுபடி செய்கின்ற கட்டளையின் பிரதி ஒன்றைக் காணிப் பதிவகத்தின் எந்தப் பக்கத்தில் வழக்கின் முழுவுறாவழக்கு அல்லது அதன் தொடர்ச்சி பதிவு செய்யப்பட்டதோ அந்தப் பக்கத்தில் பதிவு செய்வித்தல் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**27**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"சட்டரீதியான பிரதிநிதியைப் பெயர்குறித்து நியமிக்கின்ற நிருபம்.

81. (1) (இதனகத்துப் பின்னர் "பெயர் குறித்து நியமிப்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிரிவிடல் வழக்கொன்றுக்கான கட்சிக்காரர் ஒவ்வொருவரும் அல்லது இச்சட்டத்தின் கீழ் நிருபம் ஒன்றைக் கோப்பிடுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேறு ஆள் எவரும், வழக்கின் இறுதித் தீர்மானம் முடிவுறாதிருக்கும்போது அவர் இறக்கும் பட்சத்தில் வழக்கைக் கொண்டு நடாத்துவதற்கு அவரது சட்டரீதியான பிரதி நிதியாக இருப்பதற்கு விருப்பத் தெரிவு வரிசைக் கிரமத்தில் மூன்று ஆட்களுக்கு மேற்படாமல் ஆகக்குறைந்தது ஓர் ஆளைப் பெயர் குறித்து நியமிக்கின்றதும் இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் தரப்பட்டுள்ள படிவத்தில் இருக்கின்றதுமான நிருபம் ஒன்றை நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும் அல்லது கோப்பிடச் செய்வித்தல் வேண்டும்.

(2) (அ) அத்தகைய நியமத்தர்களில் ஒருவர், அவர்களுடைய பெயர்கள் நிருபத்தில் எந்த விருப்பத்தெரிவு வரிசைக் கிரமத்தில் தரப்பட்டுள்ளனவோ அந்த வரிசைக்கிரமத்தின் பிரகாரம் அத்தகைய பெயர் குறித்து நியமிப்பவரின் மரணத்தின்மேல் வழக்கைக்கொண்டு நடாத்தும் நோக்கங்களுக்காகப் பெயர் குறித்து நியமிப்பவரின் சட்டரீதியான பிரதி நிதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) நிருபத்தில் எந்நியமத்தர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளனவோ அந்த நியமத்தர்களில் எவரும் மரணிக்கும் பட்சத்தில் அல்லது இயலாமை அடையும் பட்சத்தில், பெயர்குறித்து நியமிக்கின்ற ஆள்

மரணிக்கும் பட்சத்தில், வழக்கைக் கொண்டு நடாத்தும் நோக்கங்களுக்காக, விருப்பத்தெரிவு வரிசைக் கிரமத்தில் அவருக்கு அடுத்ததாகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்கும் ஆள், சட்டரீதியான பிரதிநிதி எனக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் சட்டப் பிரதிநிதியாக அவ்வாறு நியமிக்கப்படுவதற்கான சம்மதத்தைக் குறிப்பிட்டுக் காட்டும் நிருபத்தில் அவரது அல்லது அவர்களது ஒப்பத்தை இடுதல் வேண்டும். பெயர் குறித்து நியமிப்பவரினதும் நியமிக்கப்படுவதற்கு அவ்வாறு சம்மதமளிக்கின்ற நியமனம் பெறுநர் அல்லது நியமனம் பெறுநர்களின் ஒப்பங்கள் சட்டத்தரணியால் அல்லது சமாதான நீதிவானால் அல்லது சத்திய ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய நிருபத்தைக் கோப்பிலிடத் தவறியமை, அத்தகைய தவறுகையினால் மாத்திரமே, பிராதை உரிமைக் கோரிக்கைக் கூற்றை, திறத்தவராகச் சேர்த்துக் கொள்வதற்கான அல்லது விண்ணப்பத்தை குறைபாடுள்ளதாகச் செய்வதாக அல்லது 7 ஆம் பிரிவில் உள்ளது எது எப்படியிருப்பினும், அத்தகைய பிராதை, உரிமைக் கோரிக்கைக் கூற்றை, அல்லது ஒரு திறத்தவராகச் சேர்ப்பதற்கான ஏதேனும் விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான ஒரு காரணமாக அல்லது ஏதுவாக இருத்தலாகாது.

(3) நீதிமன்றமானது, வழக்கின் இறுதித் தீர்மானத்தின் முன்னர், எந்நேரத்திலும் அதன் சொந்தப் பிரேரணை மீது அல்லது எவரேனும் திறத்தவரின் விண்ணப்பத்தின் மீது வழக்குக்கான ஒரு திறத்தவரை, அல்லது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒரு நிருபத்தைக் கோப்பிலிடத் தேவைப் படுத்தப்படும் எவரேனும் ஆளை நீதிமன்றத் தில் அத்தகைய நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அத்தகைய நிருபத்தைக் கோப்பி விடுமாறு தேவைப்படுத்தலாம்.

(4) பெயர் குறித்து நியமனம் பெறுநர் ஒருவர் பெயர் குறித்து நியமிப்பவரின் இறப்பிற்கு முன்னர் எந்நேரத்திலும், பெயர் குறித்து நியமிப்பவருக்கு அறிவித்தல் கொடுத்து, அத்தகைய பெயர் குறித்து நியமனம் பெறுநராக இருப்பதற்கான அவரது சம்மதத்தை மீளப் பெறுவதற்கான பிரேரணை என்ற வகையில் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம், என்பதுடன் அத்தகைய சந்தர்ப்பத்தில், பெயர் குறித்து நியமிப்பவரின் பெயர் குறித்து நியமனம் பெறுநராக இருப்பதிலிருந்து அவர் இல்லாதிருந்தாரென நீதிமன்றம் கட்டளையை ஆக்குதல் வேண்டும்; அத்துடன் பெயர் குறித்து நியமிப்பவரால் கோப்பிடப்பட்ட நிருபத்திலிருந்து அத்தகைய நியமத்தவரை நீக்கிவிடச் செய்வித்தல் வேண்டும்.

(5) பெயர் குறித்து நியமிப்பவர், ஒருவர் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கு அமைவாக வழக்கின் இறுதித் தீர்மானத்திற்கு முன்னர் எந்நேரத்திலும், பெயர் குறித்து நியமனம் பெறுநருக்கு அறிவிப்பதோடு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பெயர் குறித்து நியமனம் பெறு நர்களை பெயர் குறித்து நியமிக்கும் ஒரு புதிய நிருபத்தைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பிக்க லாம். அத்தகைய புதிய நிருபத்தைக்

கோப்பிலிடுவதன் மீது அத்தகைய பெயர் குறித்து நியமிப்பவரின் முன்னைய நிருபம் நீக்கம் செய்யப்பட்டு அத்தகைய புதிய நிருபத்திலுள்ள பெயர் குறித்த நியமனம் உடனடியாகப் பயனுறுதல் வேண்டும்.

(6) பெயர் குறித்து நியமிப்பவர் ஒருவரின் இறப்பின்மீது, முன்னுரிமை ஒழுங்கில் பெயர் குறித்து நியமிப்பவரினால் கோப்பிலிடப்பட்ட நிருபத்தில் முதலில் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள், அத்தகைய பெயர் குறித்து நியமிப்பவரின் இறப்புக் காலம் தொடக்கம் வழக்கு நோக்கங்களுக்காக அவரது சட்டமுறையான பிரதிநிதியெனக் கருதப்படுதல் வேண்டும்.

(7) இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் சட்ட முறையான பிரதிநிதியாகக் கருதப்படும் ஒரு பெயர் குறித்து நியமனம் பெறுநர் இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவர் உயிருடனிருந்தால், அவருக்குரித்துடையதாகவிருந்திருக்கும் வழக்கு நோக்கங்களுக்காக அத்தகைய எல்லா நடபடிகளையும் எடுப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(8) (அ) பெயர் குறித்து நியமிக்கப்படுபவர் ஒருவர் இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் சட்டமுறையான பிரதிநிதியாகச் செயற்படுவதற்கு மறுக்கலாகாது. எனினும் அவர் முதலில் மனு என்ற வகையில் பெறப்பட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடனும், அத்தகைய பெயர் குறித்து நியமிப்பவரின் வேறு பெயர் குறித்து நியமனம் பெறுநர்கள் இருப்பின் அவர்களுக்கு அறிவித்தல் கொடுத்த பின்னரும் அத்தகைய பெயர் குறித்து நியமிப்பவரின் சட்டமுறையான பிரதிநிதியின் பதவியிலிருந்து

விடுவிப்புப் பெறுவதற்கு நீதிமன் றத்திலிருந்து அனுமதியைப் பெற விண்ணப்பிக்கலாம்.

(ஆ) அத்தகைய அனுமதியை நீதிமன்றம் வழங்கும் சந்தர்ப்பத்தில் பெயர் குறித்து நியமிப்பவரினால் கோப் பிடப்பட்ட நிருபத்தில் முன்னுரிமை வரிசைக் கிரமத்தில் அடுத்துள்ள பெயர் குறித்து நியமனம் பெறுநர் வழக்கின் நோக்கங்களுக்காக அத்த கைய இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் சட்டமுறையான பிரதிநிதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) இப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஒரு விண்ணப்பம், இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவர் ஒருவரின் தனிப் பெயர் குறித்து நியமனம் பெறுநராக அல்லது தனி எஞ்சிய பெயர் குறித்து நியமனம் பெறுநராக இருக்கும் பெயர் குறித்து நியமனம் பெறுநர் ஒருவரி னால் செய்யப்படுகின்றவிடத்து, அத்தகைய பெயர் குறித்து நியமனம் பெறுநர், அத்தகைய இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் மரபுரிமையாளருக்கு அவரின் விண் ணப்பம் தொடர்பாக அறிவித்தல் கொடுக்க வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்டவாறு நீதிமன்றம் அனுமதி வழங்கும் சந்தர்ப்பத்தில் வழக்கு நோக்கங்களுக்காக அத்த கைய இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் சட்டமுறையான பிரதிநிதியாகச் செயல்பட, அத்த கைய இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் மரபுரிமையாளரின் சம்மதிக்கும் ஒரு மரபுரிமையாளரை,

அத்தகைய நீதிமன்றம் நியமித்தல் வேண்டும்.

(9) இப்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஒரு நிருபத்தைக் கோப்பிட ஒரு திறத்தவர் அல்லது ஆள் தவறியமை அத்துடன் அத்தகைய இறந்தவரான திறத்தவரின் அல்லது ஆளின் மரணச் சொத்தைப் பிரதிநிதிப்படுத்துவதற்கு சட்ட முறையான பிரதிநிதி ஒருவரின் நியமனம் இல்லாதிருப்பது எது எப்படியிருப்பினும் வழக்கில் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் தீர்ப்பு அல்லது தீர்வை அல்லது செய்யப்பட்ட ஏதேனும் கட்டளை, பயனுறுத்தப்பட்ட பிரிவிடல் அல்லது விற்பனை அல்லது வழக்கில் செய்யப்பட்ட காரியம் செல்லுபடியானதும் பயனுறுதியுடையதுமாகும் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவானதாகும் எனக் கருப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய இறந்தவரான திறத்தவர் அல்லது ஆளின் சட்ட முறையான மரபுரிமையாளரையும் பிரதிநிதிகளையும் பிணித்தலும் வேண்டும். அத்தகைய, ஒரு நிருபத்தைக் கோப்பிலிடத் தவறியமை, அத்தகைய வழக்கில் வழக்கு நடவடிக்கைகளை செல்லுபடியற்றதாக்குவதற்கு ஒரு ஏதுவாகவும் இருத்தலாகாது.

(10) (அ) இப்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறு ஒரு நிருபத்தைக் கோப்பிடத் தவறிய ஒரு திறத்தவரின் அல்லது ஆளின் இறப்பின் மீது, எவரேனும் திறத்தவர் அல்லது ஆள் அத்தகைய இறந்தவரான திறத்தவரின் அல்லது ஆளின் சட்டமுறையான பிரதிநிதியாக ஒர் ஆள் நியமிக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்து மறு கட்சியில்லாத விண்ணப்பம் மூலம் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம், என்பதுடன் நீதிமன்றமானது, அத்தகைய நியமனம் அவசியமானதென, விசாரணையின் பின்னர் திருப்தியடைந்ததன் பேரில், இப்பிரிவின் நோக்கங்களுக்காக

அத்தகைய இறந்தவரான திறத்தவ ரின் அல்லது ஆளின் சட்ட முறையானபிரதிநிதியாக தகுதி வாய்ந்த ஓர் ஆளை நியமிக்கலாம். அத்தகைய சட்டமுறையான பிரதிநிதி அத்தகைய நியமனக் காலம் வரையிலிருந்த வழக்கு நடவடிக் கைகளினால் பிணிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய விண்ணப்பமும் நியமனமும் விளக்கத்தை அல்லது வழக்கு நடவடிக்கையைப் பின்போடு தலுக்கான ஓர் ஏதுவாக இருத்தலா காது;

ஆயின், நீதிமன்றமானது அதன் தற்றுணிபில் அதற்கான காரணங் களைப் பதிவு செய்த பின்னரும் செலவுத்தொகையின் முன் கொடுப்ப னவின் மீதும், அவ்வாறு செய்தல் நீதியின் நலன் கருதியே என நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால் விளக்கத்தின் பிற்போடலொன்றை. அனுமதிக்கலாம்.

(இ) நீதிமன்றத்தின் செலவின் முற் கொடுப்பனவிற்கு கட்டளையிடுகை யில் நீதிமன்றமானது வழக்கு நடவடிக்கை கொடுக்கப்பட்ட தேதியையும் அத்தகைய விண் ணப்பத்திற்கு முன்னர் நடைபெற்ற விளக்கத் திகதிகளையும் வழக்கு எந்தக் கட்டத்திலுள்ளதோ அந்தக் கட்டத்தையும், நீதிமன்றம் இயைபான தெனக் கருதும் வேறு எவையேனும் விடயங்களையும் கவனத்திலெடுத்தல் வேண்டும்.

(11) (அ) இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் ஒரு மரபுரிமையாளர், அத்தகைய பெயர் குறித்து நியமிப்பவரின் இறப்பின் பின்னர் எந்நேரத்திலும், அத்தகைய

இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் சட்டமுறையான பிரதிநிதியை அகற்றிவிட வேண்டுமெனவும் அத்தகைய விண்ணப்பத்தில் பெயர் குறிப்பிடப் பட்ட வேறு ஆளை அல்லது இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரினால் கோப்பிடப் பட்ட நிருபத்திலுள்ள முன்னுரிமை ஒழுங்கு வரிசையில் அடுத்ததாகப் பெயர் குறிப்பிடப்பட்ட ஆளை, அத்தகைய சட்டமுறையான பிரதிநிதியாக நியமனம் செய்ய வேண்டுமெனவும் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்யலாம்.

(ஆ) இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் மரபுரிமையாளரின் நலன் கருதி அவ்வாறு செய்ய வேண்டுமென திருப்திப்படுவதன் மீது, நீதிமன்றமானது அத்தகைய சட்டமுறையான பிரதிநிதியை அகற்றிவிட்டு, இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரினால் கோப்பிடப்பட்ட நிருபத்தில் முன்னுரிமை ஒழுங்கு வரிசையில் அடுத்ததாகப் பெயர் குறித்துள்ள ஆளை நியமிக்கலாம் அல்லது அவ்வாறு செய்வதற்குப் போதிய ஏதுக்கள் இருந்தால் விண்ணப்பத்தில் பெயர் குறித்து நியமித்த ஆளை, இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் பிரதிநிதியாக நியமிக்கலாம்.

(இ) இப்பிரிவின் கீழான ஒரு விண்ணப்பம், ஒரு மனு அத்துடன் சத்தியக் கடதாசி என்ற வகையில் இருத்தல் வேண்டும் என்பதுடன்

நீதிமன்றமானது அதன் தற்றுணிபின் மீது, இறந்தவரான பெயர் குறித்து நியமிப்பவரின் மரபுரிமையாளர் எவரும் இருப்பின் அத்தகைய வேறு மரபுரிமையாளருக்கு விண்ணப்பத்தின் அறிவித்தலை வழங்கலாம்.

(12) இச்சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கை எதுவும், இச்சட்டத்தின் கீழ் ஒரு நிருபத்தைக் கோப்பிட தேவைப்படுத்தும் ஒரு திறத்தவரின் அல்லது ஆளின் இறப்பின் காரணமாக பிற்போடவோ அல்லது ஒத்திவைக்கவோ அல்லது வழக்கு நடவடிக்கைகளின் ஏதேனும் நடபடியை பிற்போடவோ கூடாது.

(13) நாலு, (5) (8) (அ), (10) அல்லது (11) ஆம் உட்பிரிவின் கீழான ஒரு விண்ணப்பம், விளக்கத்தைப் பிற்போடுவதற்கான ஓர் ஏதுவாக இருத்தலாகாது எனினும் நீதிமன்றம், அத்தகைய பிற்போடலை அனுமதித்தல் நீதியின் நலன் கருதியே என அது அபிப்பிராயப்படுமிடத்து, விண்ணப்பத்தைச் செய்யும் ஆளின் செலவு கொடுப்பனவின் மீது ஒரு பிற்போடலை வழங்கலாம்.

(14) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "சட்டமுறையான பிரதிநிதி" என்பது இச்சட்டத்தின் கீழ் பெயர் குறித்த நியமனமொன்றின் அல்லது நீதிமன்றத்தினால் செய்யப்படும் நியமனம் ஒன்றின் பயனைக் கொண்டு வழக்கு நடவடிக்கையின் நோக்கங்களுக்காக, இறந்தவரான திறத்தவரின் அல்லது ஆளின் மரணச் சொத்தை பிரதிநிதிப்படுத்துகின்ற ஓர் ஆள் எனப் பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) பிரிவு 12 (2) ஆம் பிரிவின் கீழ் அழைப்புக் கட்டளைப் படிவம் என்ற தலைப்பில் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் "நீவிர் தேவைப்படுத்தப்படுகிறீர்" என்ற சொற்களுக்குப் பதிலாக "நீவிர் தேவைப்படுத்தப்படுகிறீர் (தாங்கள் உரிமைக் கோரிக்கை பற்றிய கூற்றொன்றை கோப்பிட்டாலும் சரி கோப்பிடாவிட்டாலும் சரி பொருளளவில் பிரிவிடல் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில், அச்சட்டத்தின் 81 ஆம் பிரிவிக்கிணங்க, வழக்கின் இறுதித் தீர்மானம் முடிவுறாதிருக்கும் போது தாங்கள் இறக்கும் பட்சத்தில் வழக்கின் நோக்கங்களுக்காகத் தாங்களது சட்டமுறையான பிரதிநிதியாகவிருப்பதற்கென ஆளொருவரை நியமித்து நிருபமொன்றை அத்திகதியன்று அல்லது அத்தேதிக்கு முன்னர் கோப்பிடுமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்"

(2) பிரிவு (12) (2) என்பதன் கீழ் "அறிவித்தல் படிவம்" என்ற தலைப்பில் "இத்தால் நீவிர் தேவைப் படுத்தப்படுகின்றீர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக " இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படு கின்றீர் (தாங்கள் உரிமைக் கோரிக்கை பற்றிய கூற்றொன்றை கோப்பிட்டாலும் சரி) பொருளளவில் பிரிவிடற் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில், அச்சட்டத்தின் 81 ஆம் பிரிவுக்கிணங்க வழக்கின் இறுதித் தீர்மானம் முடிவுறாதிருக்கும் போது தாங்கள் இறக்கும் பட்சத்தில் வழக்கின் நோக்கங்களுக்காகத் தங்களது சட்டமுறையான பிரதிநிதியாகவிருப்பதற்கென ஆளொருவரை நியமித்து நிருபமொன்றை அத்திகதியன்று அல்லது அத்தேதிக்கு முன்னர் கோப்பிடுமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்" என்னும் சொற்களையிடுவதன் மூலமும்.".

(3) பிரிவு 12 (2) இன் கீழ் விதித்துரைக்கப்பட்டதான "பிசுக்காலுக்கான பணிப்பாணைப் படிவம்" என்று தலைப்பிடப்பட்ட படிவத்தில் "மேலே குறிப்பிடப்பட்ட" என்பது தொடங்கி "அத்தாட்சிப் படுத்துக." என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்—

"இதனோடு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிவித்தலை உடனடியாக வெளிக்காட்டி வைத்து பிரிவிடல் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் 3ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் அதன் உள்ளடக்கல்களை பிரசித்தப்படுத்துவித்து எம்முறையில் நீவிர் இப் பணிப்பாணையை நிறைவேற்றினீர் என்பது பற்றி 19.........ஆம்.........ஆண்டு .........மாதம்.........நாளன்று அல்லது அதன் முன்னர் இந் நீதிமன்றத்திற்கு அத்தாட்சிப் படுத்துக."

(4) பதினாறாம் பிரிவின் கீழ் விதித்துரைக் கப்பட்டதான "பூர்வாங்க அளப்பனவுக்கான ஆணை" என்று தலைப்பிடப்பட்ட படிவத் தில், "உமது வெளிக்களக் குறிப்புகளின்" என்பது தொடங்கி "நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது." என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம்:—

"உமது வெளிக்களக் குறிப்புகளின் உண்மையான பிரதியுடனும் பொருளளவில் விதிக்கப்பட்ட படிவத்திலும் இணைப்படியிலும் இருக்க வேண்டிய உமது அறிக்கையுடனும் அதனை 19.........ஆம் ஆண்டு.........மாதம் .........ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் இணைப்படியில் சமர்ப்பிக்குமாறு இத்தால் நீவிர் கட்டளையிடப்படுகின்றீர். அளப்பனவு நேரத்தில் காணிக்கான கோரிக்கை எதனையும் செய்யக்கூடியவரான (வழக்கிற்கான கட்சிக்காரர் ஒருவர் அல்லது அவரது முகவர் அல்லாத) எவரேனும்

ஆளுக்கு 16ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் அறிவித்தலின் பிரதியைச் சேர்ப்பிக்குமாறு நீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

உமது கட்டணமாக.........ரூபா பணத் தொகை ஒன்று நீதிமன்றத்தில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

மு.கு. இதனகத்து நிர்ணயிக்கப்பட்ட திகதிகளின் நீடிப்புகள் அத்தகைய நீடிப்பை நீவிர் ஏன் தேவைப்படுத்துகிறீர் என்பதற்கான காரணங்களைக் கொடுத்து உம்மால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது மாத்திரமே கொடுக்கப்படும்.";

(5) இருபதாம் பிரிவின் கீழ் விதித்துரைக்கப்பட்ட "அறிவித்தற் படிவம்" என்னும் தலைப்பிலான படிவத்தில் "ஒழுகும் படியும் தேவைப் படுத்தப்படுகின்றீர்." என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"ஒழுகும்படியும் தேவைப்படுத்தப்படுகின்றீர். வழக்கு இறுதியாகத் தீர்மானிக்கப்படாதிருக்கும் போது நீர் இறக்கும் பட்சத்தில் வழக்கின் நோக்கங்களுக்காக உமது சட்டப்பிரதிநிதியாக இருப்பதற்கென ஆள் ஒருவரை அச்சட்டத்தின் 81 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பெயர் குறித்து நியமிக்கும், பொருளளவில் பிரிவிடல் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் நிருபமொன்றை (உரிமைக் கோரிக்கைக் கூற்றொன்றை நீவீர் கோப்பிடினும் சரி, அல்லாவிடினும் சரி) 19.........ஆண்டு.........மாதம்.........திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கோப்பிடுமாறு நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.";

(6) பிரிவு 32 இன்கீழ் விதித்துரைக்கப்பட்ட "ஆணையாளர் நீதிமன்றத்திற்குச் செய்யும் திருப்பி அனுப்பற் கூற்று" என்ற தலைப்பிலான படிவத்தில்—

(அ) அதன் (vi) ஆம் பந்தியை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்—

"(vi) பிரிவிடல் செய்யும் முறையும் கட்சிக்காரர்களின் பெயரும் முறையே அவர்களுக்குள்ள பங்குகளினதும் அக்கறைகளினதும் தன்மையும் அளவும். (காணி எத்தனை துண்டுகளாக பிரிவிடல் செய்யப்பட்டது என்பதையும் ஏதேனும் இருந்தால் ஒரு துண்டாக சேர்த்து குறித்தொதுக்கப்பட்ட துண்டுகளின் தொகையையும் இங்கு கூறி பிரிவிடல் வரைபட இலக்கத்தையும் தேதியையும் மதிப்பிட்டு அட்டவணையையும் பகிர்ந்தளித்தல் பற்றிய சுருக்கத்தையும் குறிப்பிட்டு அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணியை மீளப்பிரித்தல் தொடர்பான எழுத்திலான சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகாத எவையேனும் காணித் துண்டுகள் உண்டா எனவும் கூறுக)"; அத்துடன்

(ஆ) அதன் (vii) ஆம் பந்தியை நேரே உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்

"(viii) ஒரு காணித்துண்டாகக் கருதப்படும் எவையேனும் காணித்துண்டுகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி" ; அத்துடன்

(இ) அதன் 5 ஆம் விடயத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்—

"(6) சொல்லப்பட்ட வரைபடமானது அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணியை மீளப் பிரித்தல் தொடர்

பிலான எழுத்திலான சட்டத்திற்கு அமைவாக உள்ளதென நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

மு.கு. இந்தச் சான்றிதழுக்கு எவையேனும் விதி விலக்குகள் இருக்குமானால் உதாரணமாக வரைபடத்தில் காட்டப் பட்டுள்ள ஏதேனும் காணித்துண்டு அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணியை மீளப் பிரித்தல் தொடர் பிலான எழுத்திலான ஏதேனும் சட்டத்திற்கமைய இருக்காவிட்டால் அதன் விபரங்கள் சான்றிதழுக்கான விதிவிலக்கென்ற வகையில் தரப் படுதல் வேண்டும்.".

(7) அந்த அட்டவணையின் இறுதியில் பின்வரும் புதிய படிவங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

**"69 (1) (அ) எனும் பிரிவின் கீழான அறிவித்தற் படிவம்**

[பிரிவு 69 (1) (அ) ]

" (69 (1) (அ) ) ...................... மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல.: ...................... அ.ஆ. ......................
வழக்காளி

எதிர்

இ.ஈ. ...................... மற்றும் ஏனையோர் ......... ............... எதிராளிகள். ...................... மாவட்டத் திலுள்ள ...................... கிராமத்தில்/ கிராமங்களில் அமைந்துள்ள ...................... என அழைக்கப்படும் காணியின்/ காணிகளின் பிரிவிடுதலுக்காக/ விற்பனைக்காக பிரிவிடல் சட்டத்தின்கீழ் ...................... இலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் ...................... இல. வழக்கானது தொடரப்பட்டுள்ளது என நீவிர் இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்.

நீவிர் வழக்குக்கான கட்சிக்காரராக இருக்க வேண்டுமென அல்லது ஆக்கப்பட்டிருக்கவேண்டுமென நீதிமன்றம் அபிப்பிராயப்படுகின்றது. காணியில் / அல்லது காணிகளில் ஏதேனும் அக்கறையை நீவிர் கோரினால், மேற்சொல்லப்பட்ட வழக்குக்கான கட்சிக்காரராகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென நீவிர் விரும்பினால் 19 ...................... மாதம் ....................... ஆம் திகதியன்று அல்லது அதன் முன்னர் எழுத்திலான பிரேரணை மூலம் விண்ணப்பிக்க வேண்டுமென நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர். அத்துடன் நீவிர் அவ்வாறு விண்ணப்பித்தால் உமது உரிமைக் கோரிக்கைக் கூற்று ஏதேனும் இருந்தால் அதனைக் கோப்பிடுமாறும், 19 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுமாறும் இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர். வழக்கு இறுதியாக தீர்மானிக்கப்படுமுன்னதாக நீவிர் இறக்கும் பட்சத்தில் வழக்கின் நோக்கங்களுக்காக உமது சட்டப் பிரதிநிதியாக இருப்பதற்கென ஆள் ஒருவரை அச்சட்டத்தின் 81ஆம் பிரிவிற்கிணங்க பெயர் குறித்து நியமிக்கும், பொருளளவில் பிரிவிடல் சட்டத்திற்கான 2ஆம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்திலான நிருபமொன்றை (உரிமைக் கோரிக்கைக் கூற்றொன்றை நீர் கோப்பிட்டாலும் சரி அல்லாவிடினும் சரி) 19 ......ஆண்டு .........மாதம் ............நாளன்று அல்லது அதன் முன்னர் கோப்பிடுமாறு இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

மேற்சொல்லப்பட்ட வழக்குக்கான கட்சிக்காரர் ஒருவராக நீதிமன்றத்தினால் நீவிர் சேர்க்கப்பட்டால், உமது கோரிக்கைக் கூற்று ஏதேனும் இருப்பின் அதனை நீவிர் எத்திகதியன்று அல்லது எத்தேதிக்கு முன்னர் கோப்பிட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தினால் திகதி நியமிக்கப்பட்டுள்ளதோ அத்தேதி பற்றி கவனத்திற் கொள்ள வேண்டுமென்பதுடன் 19ஆம் பிரிவின் தேவைப் பாடுகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டுமென நீவிர் இத்தால் மேலும் தேவைப்படுத்தப்பட்டுள்ளீர்.

ஒப்பம் ........................

பதிவாளர்.

19 ......... ஆண்டு ............ மாதம் ......... ஆம் நாள்.

**சட்டப் பிரதிநிதி ஒருவரை பெயர் குறித்து நியமிக்கின்ற நிருபத்தின் படிவம்.**

(பிரிவு 81)

மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இல.: ...............

வழக்காளி
எதிராக
எதிராளியும், ஏனையோரும்

(வழக்காளி/ எதிராளி/ நில அளவையாளர் முன்னரான கோரிக்கையாளர்/ வெளிவிடப்பட்ட கட்சிக்காரர்/ நீதிமன்றத்தால் சேர்க்கப்பட்ட கட்சிக்காரர்/ சேர்க்கப்பட/ பதிலீடு செய்யப்பட நாடும் கட்சிக்காரர்) ....................... ஆகிய நான் இந்த வழக்கு இறுதியாக தீர்மானிக்கப்படுமுன்னர் நான் இறக்கும் பட்சத்தில் இவ்வழக்கின் நோக்கங்களுக்காக எனது சட்டப் பிரதிநிதியாக பின்வருவோரை இத்தால் பெயர் குறித்து நியமிக்கின்றேன்.

முன்னுரிமை இலக்கம் 1 ........................
2 ........................
3 ........................

அத்துடன் மேலே சொல்லப்பட்டவாறாக நான் இறக்கும் பட்சத்தில் எனது சட்டப்பிரதிநிதியாக மேலே கொடுக்கப்பட்ட முன் உரிமை ஒழுங்கின்படி அவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென நான் இத்தால் மேலும் வேண்டுகின்றேன்.

1. மேற்படி நியமனத்திற்கு ........................ எனும் முகவரியைச் சேர்ந்த ........................ ஆகிய நான் சம்மதிக்கிறேன்.

........................
ஒப்பம்.

...................... எனும் முகவரியைச் சேர்ந்த ...... ................ ஆகிய நான் சட்டத்தரணி ஒருவராக /சமாதான நீதிவான் ஒருவராக /சத்திய ஆணையாளராக இருந்து கொண்டு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் இந்த நிருபத்தின் உள்ளடக்கங்களை வாசித்து விளங்கிக் கொண்டதன் பின்னர் 199 .........ஆம் ஆண்டு .........ஆம் மாதம் ...... ஆம்......... நாளாகிய இன்று.........இல் எனது முன்னிலையில் தனது ஒப்பத்தை வைத்தார் என நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.........................

ஒப்பம்.

சட்டத்தரணி/ சமாதான நீதிவான்/
சத்திய ஆணையாளர்.

2. மேற்படி நியமனத்திற்கு ...................... எனும் முகவரியைச் சேர்ந்த ...................... ஆகிய நான் சம்மதிக்கிறேன்.

.........................

ஒப்பம்.

...................... எனும் முகவரியைச் சேர்ந்த ......... ............... ஆகிய நான் சட்டத்தரணி ஒருவராக /சமாதான நீதிவான் ஒருவராக / சத்திய ஆணையாளராக இருந்து கொண்டு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் இந்த நிருபத்தின் உள்ளடக்கங்களை வாசித்து விளங்கிக் கொண்டதன் பின்னர் 199 ...........ஆண்டு ...........மாதம் ...... ஆம்......... நாளாகிய இன்று............ இல் எனது முன்னிலையில் தனது ஒப்பத்தை வைத்தார் என நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.........................

ஒப்பம்.

சட்டத்தரணி/ சமாதான நீதிவான்/
சத்திய ஆணையாளர்.

3. மேற்படி நியமனத்திற்கு ...................... எனும் முகவரியைச் சேர்ந்த ...................... ஆகிய நான் சம்மதிக்கிறேன்.

........................
ஒப்பம்.

........................ எனும் முகவரியைச் சேர்ந்த ...... ................. ஆகிய நான் சட்டத்தரணி ஒருவராக / சமாதான நீதிவான் ஒருவராக / சத்திய ஆணையாளராக இருந்து கொண்டு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் இந்த நிருபத்தின் உள்ளடக்கங்களை வாசித்து விளங்கிக் கொண்டதன் பின்னர் 199 .........ஆம் ஆண்டு .........ஆம் மாதம்......... ஆம் நாளாகிய இன்று............ இல் எனது முன்னிலையில் தனது ஒப்பத்தை வைத்தார் என நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

........................
ஒப்பம்.
சட்டத்தரணி/ சமாதான நீதிவான்/
சத்திய ஆணையாளர்.

ஒப்பம்: ........................
(வழக்காளி/ எதிராளி/ கட்சிக்காரர்/ கோரிக்கையாளர்/ அவசியமான கட்சிக்காரர்/ சேர்க்கப்பட்ட/ பதிலீடு செய்யப்பட்ட கட்சிக்காரர்).

........................எனும் இடத்தைச் சேர்ந்த ........................ஆகிய நான் சட்டத்தரணி ஒருவராக/ சமாதான நீதிவானாக/ சத்திய ஆணையாளராக இருந்து கொண்டு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் இந்த நிருபத்தின் உள்ளடக்கங்களை வாசித்து பொருள் விளங்கிக் கொண்டதன் பின்னர் 199 ............ஆம் ஆண்டு ............ஆம் மாதம் ............ஆம் நாளாகிய இன்று ..................இல் எனது முன்னிலையில் தமது ஒப்பத்தை வைத்தார் என நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

........................
ஒப்பம்.

நிலைமாறு கால ஏற்பாடு.

**29.** இச்சட்டம் தொடங்கும் திகதியன்று, ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்டு முடிவுறாதிருக்கும் பிரிவிடல் வழக்கு விண்ணப்பம் அல்லது வேறு கருமம் ஒவ்வொன்றும் சூழ்நிலைகள் அனுமதிக்கும் அளவுக்கு (வழக்குக்கான திறத்தவர்களினாலும் ஏனையோரினாலும் சட்டப்பிரதிநிதி

ஒருவரை பெயர் குறித்து நியமிக்கும் நிருபத்தைக் கோப்பிடுவதை தேவைப்படுத்தும் ஏற்பாடுகள் உட்பட) இச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதனுரிமைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ், இச்சட்டம் ஆரம்பமாகிய தேதிக்குப் பின்னர் அவை ஆரம்பத்திலிருந்தே தொடுக்கப்பட்டாற் போன்ற அதே முறையிலும் ஒவ்வொரு அம்சத்திலும் இறுதித் தீர்ப்பு மற்றும் தீர்வை வரை தொடரப்படுதலும் அத்துடன் தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

30. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 (வெளிநாட்டு) ரூபா 1,849 ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*